**இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட”

உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களில் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 7(ஆ) ஆவது பந்தி பிரகாரம் அறிக்கைப்படுத்தப்படும் காலப்பகுதிக்குள் வெளிச் செல்லும் தன்மையில் அல்லது சொத்துக்கள் பயன்பாட்டுத் தன்மையில் அல்லது பொறுப்புக்கள் ஏற்படும் தன்மையில் இடம்பெறுகின்ற பொருளியல் பயனாளிகளின் அல்லது சேவைகளின் இயலுமானவர்களின் குறைகள் அனைத்தும் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்குரிய 2020 ஆம் ஆண்டிலே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,037,242 ஆன கட்டிட திருத்த வேலைகள் மற்றும் மொத்தம் ரூபா 8,541,394 ஆன பயிற்சி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவுகள் கணக்கிடப்படாததன் காரணமாக சொத்துக்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 10,578,636 வால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலே உரிய மூலதனத் தொகை திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெறாததன் காரணமாக இந்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முடியாது போனது. 2020 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளின் மூலம் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிலே கணக்குகளுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் | ஏற்றுக் கொள்கின்றேன். காணி மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்வதற்காக | அனுப்பப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள், பொறித் தொகுதிகள், மற்றும் உபகரண உருப்படிகள் ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும் அதிகார சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் 2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதும் கணக்குகளின் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம்உரித்துடைய காணிகள் மற்றும்குத்தகை காணிகள் நிதிக் கூற்றுக்களில் வேறுபடுத்தி காட்டப்பட வேண்டிய போதிலும் மொத்தம் ரூபா 9,842,565 ஆன 05 நீண்ட கால குத்தகை காணி, காணிகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த நீண்டகால குத்தகை காணிகள் உரிய நியமத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தற்போது அதிகா சபையிடம் உள்ள அரசிற்கு சொந்தமான குத்தகை காணிக்கான உரிமையை பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | உரிய நியமங்களின் பிரகாரம் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய தேய்மான அளவு ரூபா 472,331,728 ஆக காணப்பட்ட போதும், நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பிற்போடப்பட்ட வருமானங்கள் வழங்கப்பட்டதாக ரூபா 475,521,999 காட்டப்பட்டதன் பிரகாரம் வருடத்தின் வருமானம் ரூபா 3,190,271 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. அதன் | தற்போது இந்த நிலைமை சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது வருடத்திற்கு உரிய அனைத்து வருமானங்கள், செலவுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலே தேசிய பயிலுனர்கள் மற்றும் கைத்தொழில் பயிற்சி மேற்கொள்வதற்கு அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட புத்தகப் பெறுமதி ரூபா 202,278,158 ஆன காணி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையுமே நிதிநிலைமைக் கூற்றில் காணி பெறுமதியில் நீக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த 02 ஏக்கர் 03 ரூட் 38.38 பெர்சஸ் ஆன காணியை கணக்கிட்குட் படுத்தியிருக்கவில்லை. | இந்தக் காணி மீண்டும் மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். | எதிர்காலத்தில் கணக்குக் கூற்றுக்களை தயாரிக்கும் போதுநடைமுறை அல்லாத சொத்துக்களை சரியாக அடையாளங் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மோட்டார் வாக வகுப்பின்கீழ் கணக்கிடப்பட்டிருந்த ரூபா 4,496,902 கிரயமுள்ள 39 மோட்டார் வாகனங்கள் மற்றும் 25 துவிச்சக்கர வண்டிகள், 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டின் போது கைவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குள் அது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை | இந்த வாகனங்களை அடையாளங்கண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் 05 நபர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | எதிர்வருடம் வருடத்திலே கணக்கறிக்கைகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கிட வேண்டும். |
| (ஈ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காணிகளின் பெறுமதி மூலதனப்படுத்தப்படாத போது மீளாய்வாண்டிற்குள் அந்த காணிகளை அளப்பதற்காக கொடுப்பனவுகள் மேற்கொண்டிருந்த ரூபா 1,670,383 நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் கைப்பற்றப்பட்டதாக கணக்கிடப்பட்டிருந்தது. | காணிகளை அளப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் மூலதனச் செலவொன்றாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். காணி கைப்பற்றப்பட்டதன் பின்னர் காணியை மதிப்பிட்டு மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | எதிர்வருடம் வருடத்திலே கணக்கறிக்கைகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கிட வேண்டும். |
| (உ) | மோட்டார் வாகனத்தின் கீழ் கணக்கிடப்படாதிருந்த 45 | இந்த வாகனங்களை அடையாளங்கண்டு | எதிர்வரும் வருடத்திலே |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வாகனங்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீள் மதிப்பீடு செய்து ரூபா 25,547,000 ஆன மீள் மதிப்பீட்டுப் பெறுமதியான மோட்டார் வாகனத்தின் கீழ் கணக்கிடப்பட்டிடிருந்தது. மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு முன்னர் அந்த மோட்டார் வாகனம் கணக்கிடப்பட்டிருந்த சொத்துக்கள் வகுப்பினை அடையாளங் கண்டு அதன் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வை வேறுபடுத்தி நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் 05 நபர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அதிகார சபைக்கு உரிய அனைத்து வாகனங்களும் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை 2018 நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்படும் போது சொத்துக்கள் வகுப்பு 03 இன் மொத்தம் 33,603,241 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிலே நடைமுறையல்லாத சொத்துக்கள் அந்த அளவில் குறைவாக மற்றும் திரட்டிய நிதியதிதில் மறை மீதி ரூபா 12,052,310 கூடுதலாக மற்றும் மீள்மதிப்பீட்டு மேலதிகம் ரூபா 21,550,931 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்கிடப்படும் போது தாமதக் கோளாறு ஒன்று ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் வருடத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எதிர்வருடம் வருடத்திலே கணக்கறிக்கைகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கிட வேண்டும். |
| (எ) | மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்களுக்காக மீளாய்வாண்டிலே பெறுமானத்தேய்வு கணக்கிடுதல் பரிசீலனையின் போது ரூபா 89,046,292 பெறுமதியுடைய சொத்துக்கள் கைவிடப்பட்டதன் காரணமாக பெறுமானத் தேய்வு ரூபா 11,911,930 குறைவாகவும் ரூபா 15,081,844 பெறுமதியுடைய சொத்துக்கள் இருமுறை கணக்கிடப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா 3,563,977 ஆன பெறுமானத்தேய்வு கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கிடப்படும் போது தாமதக் கோளாறு ஒன்று ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் வருடத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எதிர்வரும் வருடத்திலே கணக்கறிக்கைகள் தயாரிக்கும் போது சரியாக பெறுமானத் தேய்வுகள் கணக்கிடப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பெறுமானங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1996 ஏப்ரல் 30 ஆந் திகதிய 921/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் ஏற்படுத்தப்பட்டிருந்த தொழில்சார் பயிற்சி சபைக்கான உறுப்பினர்களின் நியமனத்திற்கான தகைமைகள் உள்ளடக்கப்படாததன் காரணமாக துறைக்கு உரிய விசேட அறிவுள்ள நபர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக அந்த பயிற்சி சபை முறைமை தோல்வியடைந்திருந்தது | தொழில்சார் பயிற்சி சபையை நியமிக்கும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு உரியதாகும். வர்த்தமானி அறிவித்தலில் நியமிக்கப்பட வேண்டிய நபர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நியமிக்கப்பட வேண்டிய நபர்களின் தகைமைகள் உள்ளடக்கப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 48,676,134 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 76,882,490 ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் விளைவில் ரூபா 28,206,356 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசின் மீண்டெழும் நன்கொடை அதிகரித்தமை பிரதான காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் பயிற்சி இலக்கை தயாரிக்கும் போது மற்றும் ஆட்சேர்ப்பை மேற்கொள்ளும் போது உள்நாட்டு பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு பங்களிப்பை வழங்கக் கூடிய 07 | அந்த கற்கை நெறிக்காக பயிலுனர்களின் பங்குபற்றுதல் படிப்படியாக குறைவடைந்ததனால் அந்த கற்கை நெறியின் அளவை குறைப்பதற்கு நேர்ந்தது. மேலும் மேற்குறித்த துறைக்காகவே ஒதுக்கப்பட்ட | அதிகார சபையை தோற்றுவிக்கும் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அதிக கவனம் ஒன்று |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்சார் பயிற்சி துறைகள் தொடர்பாக குறைந்த அளவான அவதானமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் காணப்படுகின்ற வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கு பொருந்துகின்ற வகையில் பதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தும் வகையில் போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. 2019 ஆம் ஆண்டிற்குரிய இலக்கை அண்மிப்பது நூற்றுக்கு 22 ஆன அளவு தகவல் தொடர்பாடல் மற்றும் பல்நோக்கு தொழில்நுட்ப பயிற்சி துறைகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | வளங்களின் பெரும்பகுதி விசேட அரச நிறுவனங்களில் காணப்படுவதுடன் எங்களுடைய கற்கை நெறிகளுக்கு பயிலுனர்களை கவரும் தன்மை மிகவும் குறைவானதாகும். | செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 மே மாதம் வரையான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பை கணக்கிடும் போது வாழ்க்கைச் செலவு படி கவனத்தில் கொள்ளாததன் காரணமாக மீளாய்வாண்டிலே செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,898,073 ஆன மிகைக் கட்டணத்தை கவனக் குறைவாக செயற்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவொன்றாக கருதப்பட்டிருந்தது. | திறைசேரியிடமிருந்து இதற்காக தவணை அடிப்படையில் பணம் பெறப்பட்டதுடன் பணம் கிடைக்கப் பெற்ற வருடத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு செலவொன்றாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கவனக் குறைவாக செயற்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து உரிய மிகைக் கட்டணத்தை அறவிடப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய தொழில்சார் பயிற்சி மத்திய நிலையத்தை நிர்மாணிக்கும் நோக்கில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் | பாணந்துறை, மோதரவில புதிய மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக உரிய திட்டம் தயாரிக்கப்பட்டு துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன் 2020 ஆகும் போது அதன் அனைத்து பெறுகை | அதிகார சபையை நிறுவுவதற்கான சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூடிய கவனத்தை செலுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு மொத்தம் ரூபா 43,310,340 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 02 காணிகள் 2021 செப்தெம்பர் வரையும் உரிய நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகளும் அந்த செயற்திட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அந்த வருடத்தில் இடம்பெற்ற தொற்று நிலைமையின் காரணமாக அது தாமதமானதுடன், அதன் பிறகு செயற்திட்டத்தின் எஞ்சிய காலத்திற்குள் அதை நிறைவு செய்ய முடியாததனால் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் மூலதனச் செலவுகளின் கீழ் ஏற்பாடுகள் விண்ணப்பிக்கப்பட்ட போதும் அதற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு பெற்றுக் கொடுக்கப்படவில்லை.<br>வனராஜவத்தை காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிடமிருந்து அதிகாரசபை கொள்வனவு செய்ததன் பின்னர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு எதிராக காணியின் உரிமை தொடர்பாக மூன்றாம் தரப்பினர் ஒருவரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்து வத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அஹங்கமவில் காணப்பட்ட ஹோட்டல் பாடசாலை, முன் சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொள்ளாமல் உல்லாச ஹோட்டல் ஒன்றாக மாற்றுவதற்காக அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் 2016 மற்றும் 2018 காலப் பகுதிக்குள் நவீனமயப்படுத்தலுக்காக ரூபா 124,685,148 வும் உபகரண கொள்வனவிற்காக திறன் துறை சார் அபிவிருத்தி நிதியத்தினால் ரூபா 37,556,018 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 வரைக்கும் உரிய நோக்கத்திற்காக பாவனைக்குட்படுத்தப் | அஹங்கமவில் காணப்பட்ட ஹோட்டல் பாடசாலை உல்லாச ஹோட்டலொன்றாக நவீனமயப்படுத்தப்பட்டது, தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் ஹோட்டல் துறையில் கற்கை நெறிகளை தொடர்கின்ற பயிலுனர்களுக்கு மேலதிக பயிற்சியொன்றை பெற்றுக் கொடுத்து, திறமையான கலைஞர்களாக துறைக்கு நுழைவதற்கு சந்தர்ப்பமொன்றை பெற்றுக் கொடுத்தலை நோக்கமாக கொண்டேயாகும். அடிக்கடி மாற்றங்களை மேற்கொண்டதனால் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு போதுமான காலம் செலவானதென்பதை ஏற்றுக் கொள்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் ஹோட்டல் துறைக்கு மேலும் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நிறுவனமொன்றாக செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் தற்போது இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் பல்வேறு | சொத்துக்கள் உச்ச வினைத் திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான நோக்கங்களை உடைய வேலைகளுக்கும் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பட்டிருக்கவில்லை. | தேவைகளுக்காக (உ.ம்- பயிற்சி வேலைத்திட்டங்கள் போன்ற) இந்த மத்திய நிலையம் ஈடுபடுத்தப்படுகின்றது. அத்தோடு அதிகார சபைக்கு பணச் சேமிப்பொன்றும் இடம்பெறுகின்றது. எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற்றும் வேறு அரச நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு இந்த நிறுவனங்களில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. தற்போது உச்ச பயனுறுதியுடன் செயற்படவிட்டாலும் படிப்படியாக நாடு சுமூக நிலைக்கு மாறும் போது அவ்வாறு செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

### பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொத்துவில் மற்றும் காரைநகர் ஹோடல் பாடசாலை 02 இக்கு சமைய கலை வல்லுனர் கற்கைநெறிக்காக மொத்தம் ரூபா 14,944,049 வுக்கு பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், அந்த கற்கை நெறி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாததன் காரணமாக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | தமிழ் மொழி மூலமான விரிவுரையாளர்களின் பற்றாக்குறை மற்றும் ஆட்சேர்ப்பு முறைமைக்கு இணங்க தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குறைவினால் இந்த கற்கைநெறிக்கான பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாது உள்ளது. இருப்பினும் 2021 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சையில் தகைமை அடையாத இருப்பினும் மேலதிக பயிற்சிகளை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் காரைநகர் ஹோட்டல் பாடசாலைக்கு விரிவுரை நடவடிக்கைகளுக்காக நியமிப்பதற்கு தகுதியானவரென தீர்மானிக்கப்படுபவர்களுக்கு தற்போது குச்சவேலி ஹோட்டல் பாடசாலையில் பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சியை நிறைவு செய்த ஒப்புவித்தல் மற்றும் பிரயோக கற்றல் | சொத்துக்கள் உச்ச வினைத் திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான நோக்கங்களை உடைய வேலைகளுக்கும் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திறமை பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் விரிவுரையாளர் பதவிக்கு நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | பயிலுனர்களுக்காக தங்குமிட வசதியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தேசிய பயிற்சி மத்திய நிலையத்தில் 16 அறைகளும், 02 ஹோட்டல் பாடசாலைகளும், 02 இரு மாடிக் கட்டிடங்களில் 12 அறைகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் விடுதி ஆண், பெண் பொறுப்பாளர்கள் பதவிக்காகவும் ஏனைய உபகார பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு இடம்பெறாததாலும், நீர் போன்ற அத்தியவசிய வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படாததன் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் அந்த கட்டிடம் மற்றும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | பயிலுனர்களாக இந்த மத்திய நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் மாத்திரம் பங்குபற்றுவதனால் தங்குமிட வசதிக்காக கேள்வியொன்று காணப்படவில்லை. தற்போது பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காக இந்த உபகரணங்கள் மற்றும் கட்டிடம் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெலி பிரதேசம் சுற்றுலா வியாபாரம் வெற்றிகரமாக மற்றும் பெரும்பாலாக இடம்பெறும் பிரதேசமாகும். அதன் காரணமாக அந்த பிரதேசத்தின் மற்றும் வேறு பிரதேங்களின் இளைஞர் யுவதிகளுக்கு அந்த துறையில் பயிற்சியை வழங்கி தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தலை நோக்கமாகக் கொண்டு இந்த மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. நிரந்தர நீர் வசதிகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அந்த விடுதியை பாவனைக்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அரச நிதியத்தை செலவிட்டு பாரிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் அது தொடர்பாக சாத்திய வள ஆய்வொன்றை மேற்கொண்டு அது தொடர்பான சக்தி மற்றும் இடையூறுகள் அடையாளங் காணப்பட வேண்டும். |
| (இ) | உபயோகப்படுத்தலின் ஆரம்பத் திட்டத்தை தயாரிக்காமல் மற்றும் அதிகார சபையின் நோக்கத்திற்கு முரணாக சுற்றுலாவிற்காக பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அம்பாறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு ரூபா 91,026,186 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள 22 ஹோட்டல் அறைகள் மற்றும் கொள்வனவு | விளைவற்றுக் காணப்படவில்லை. பயிலுனர்களை பயிற்றுவிக்கும் போது பயிற்சி நடவடிக்கைகளுக்காக இந்த பொருட்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. | அரச நிதியத்தை செலவிட்டு பாரிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் அது தொடர்பாக சாத்திய வள ஆய்வொன்றை மேற்கொண்டு அது தொடர்பான சக்தி மற்றும் இடையூறுகள் அடையாளங் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டுள்ள ரூபா 6,102,660 ஆன மனை பொருட்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆகஸ்ட் மாதம் வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. | | காணப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவை கைநூலின் 8.13.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வேறுபாடுகளின் சாதாரண அளவு அவசர நிச்சயமற்ற ஏற்பாடுகளை விஞ்சி செல்லுமாயின் அவ்வாறான வேறுபாடு கட்டளை விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டியிருப்பினும் ஒரு ஒப்பந்தத்திற்குரிய நிச்சயமற்ற ஏற்பாட்டின் எல்லை நூற்றுக்கு 215 ஐ விஞ்சி காணப்பட்ட போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியை பெற்றிருக்கவில்லை. | இந்த செலவுகள் தாங்கப்பட்டிருப்பது, செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தில் சேமிக்கப்படுகின்ற பெறுமதிகளில் மற்றும் நிச்சயமற்ற பணத்தின் ஒதுக்கங்களினாலாகும். செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தின் 10% எல்லையை விஞ்சிடாத வகையில் உரிய கொடுப்பனவுகள் நிறுவன தலைவரின் அனுமதியின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |